# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

திங்கட்கிழமை 11.11.2024 supeedsam.com supeedsam@gmail.com





## எதிர் பிரச்சாரங்களில் பெருமை கொள்ளும் சுமந்திரன்

# த.தே.கூ சிதைவுக்குக் காரணம் எனும் குற்றச்சாட்டை ஏற்கிறாரா?

## மட்டு. மாவட்ட சங்குச்சின்ன வேட்பாளர்; ஜனா

சுமந்திரன் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செய்த சதியினை அம்பலப்படுத்துவதை தனது அரசியல் எதிரிகள் தனது பெயரை உச்சரிக்காது அரசியலை நடத்த முடியாது எனக் கூறுவதன் மூலம் தன் மீதான குற்றச்சாட்டை அவர் ஏற்றுக் கொள்கிறாரா? என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்;ட வேட்பாளர் கோ. கருணாகரம் (ஜனா) கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பழுகாமத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலேயே அவர் இக் கேள்விளை எழுப்பியுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவு குறித்த கருத்து விடயத்தில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

வடமாராட்சியில் நிகழ்ந்த ஊடக சந்திப்பொன்றில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதலில் உடைத்து வெளியேறியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பதவி ஆசையே என மீண்டும் தன்மீதான தார்மீகப் பொறுப்பை கூட்டமைப்பின் ஏனைய கட்சிகள் மீது சுமத்தியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதவி ஆசையால்

02 ஆம் பக்கத்தில்...



## அம்பாறையில் இம்முறை தமிழரசுக் கட்சி ஒரு ஆசனம் பெறுவது உறுதி

மட்டக்களப்பில் தனக்கு இழந்துள்ள ஆதரவை சரி செய்வதற்கு இங்கு சிலரை வைத்து தேசியப்பட்டியல் ஆசை காட்டி வாக்குகளைச் சிதறடிப்பதே

02 ஆம் பக்கத்தில்...












## அம்பாறையில் இம்முறை தமிழரசுக்

பிள்ளையானின் நோக்கம். அதற்கு இந்த மாவட்டத்தில் சிலரும் புத்தியற்று வேலை செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் நினைப்பது ஒரு போதும் நடக்காது. அம்பாறை மாவட்டத்திலே இம்முறை இலங்கை தமிழரசுக் கட்சி ஒரு ஆசனம் பெறுவது உறுதி என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தவராசா கலைஅரசன் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளி அன்னமலை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அம்பறை மாவட்டத்திலே மூவினங்களும் வாழ்கின்றன. இங்கு மற்றைய சகோதர இனங்கள் என்ன தவறினை விட்டாலும் அவர்களின் பிரதிநிதித்துவத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களின் வாக்குப் பலம் இருக்கின்றது. ஆனால் தமிழர்களைப் பொருத்தமட்டில் நாங்கள் ஒருமித்து தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்காது விட்டால் எங்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகக் கூடிய சாத்தியங்களே உண்டு. அந்த அடிப்படையிலேதான் நாங்கள் கிராமம் கிராமமாகச் சென்று தமிழ் மக்கள் தமிழர்களின் சின்னமான தமிழரசின் சின்னமான வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்கின்ற விடயத்தை வலியுறுத்தி வருகின்றோம்.









எமது நாவிதன்வெளி பிரதேசத்தைப் பொருத்த மட்டில் 2008ம் ஆண்டு நான் தவிசாளர் ஆனதன் பிற்பாடு சுமார் 36 வீதிகள் தார் வீதிகளாச் செப்பனிடப்பட்டன. அதே போன்று 2011ம் ஆண்டும் நான் மீண்டும் உங்கள் வாக்கினால் தாவிசாளர் ஆன போதும் பல அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இவ்வாறு அபிவிருத்திகள் பல செய்த போதும் தற்காலத்தில் வந்து இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தி இல்லை என்று தெரிவிக்கின்றனர்.

சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் இங்கு வந்து இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்தி இல்லை என்கிறார். கிழக்கு மாகாண முதலைமைச்சராக இருக்கும் போதும் சரி, தற்போது இராஜாங்க அமைச்சராக இருந்த போதும் சரி சந்திரகாந்தன் எனும் பிள்ளையானால் இந்தப் பிரதேசத்திலே மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தியை சொல்ல முடியுமா?

நான் 2011ம் ஆண்டு பிரதேச சபை தவிசாளராக இருந்த போது இங்குள்ள வைத்தியசாலையைத் தரமுயர்த்தித் தருமாறு கூறியபோது என்னைத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இணையும் படி கூறினார். நான் சொன்னேன் உங்களைப் போன்று நான் கட்சி மாற மாட்டேன் எனது மூச்சு இருக்கும் வரையில் தமிழ்த் தேசியம் என்ற அடிப்படையிலேயே செயற்படுவேன் என்று கூறியிருந்தேன்.

அவ்வாறு இந்தப் பிரதேசத்தைப் புறந்தள்ளிய பிள்ளையான் இந்தப் பிரதேசத்திற்கு ஒரு சதமேனும் நிதியுதவி செய்யாத பிள்ளையான் இன்று வந்து இந்த பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்.

நாம் எமது மண்ணை மதித்து அரசியலை முன்னெடுத்து வருகின்றோம். இது மிகவும் புனிதமான மண், எமது கட்சியும் மிகப் புனிதமானது. எமது கட்சியில் ஆசனம் கிடைக்கவில்லை என்பதற்காக கட்சிதாவியவர்களுக்கு ஆசனங்களைக் கொடுத்து எமது கட்சிக்கு எதிராகச் செயற்பட வைத்துள்ளனர். இதற்கெல்லாம் நாம் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

நாங்க இங்கு எம்மை அடக்க நினைக்கும் சகோதர இனங்கள் இரண்டுடனும் சிக்குண்டு முட்டி மோதி எமது இனைத்தை நிலத்தைக் காத்து எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என முழுமூச்சாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அம்பாறை மாவட்டத்திலே திருக்



கோவிலில் இன்னுமொரு கல்வி வலயம் மற்றும் நாவிதன்வெளி கல்முனையுடன் இணைந்ததாக 48 பாடசாலைகளை உள்ளடக்கிய கல்வி வலயமொன்றினை உருவாக்குவதற்கான திட்ட முன்மொழிவினை மாகாணசபைக்கு வழங்கியிருந்தேன். அது மாகாணசபையில் அங்கீகரிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தில் அனுமதிப்பதற்காக ஒரு கூட்டமும் நடைபெற்றது. இது தொடர்பில் ஆதரவு வழங்குமாறு வியாளேந்திரன் மற்றும் பிள்ளையானிடம் தெரிவித்தேன். அதற்கு பிள்ளையான் தமிழரசுக் கட்சியினர் இவ்வாறுதான் நடக்க முடியாத பிரச்சனைகளைக் கொண்டுவந்து சண்டையிடுவார்கள் இதனை விட்டுவிட்டு வேறு வேலையைப் பார்க்கச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார். அவ்வாறு இந்த மாவட்ட விடயங்களில் அக்கறையற்ற ஒருவருக்கு வாக்களிப்பதற்கு எமது மக்கள் தயாராக இருப்பார்களாயின் அதைவிட வெட்கமான செயல் எதுவுமில்லை.

2008ம் ஆண்டு நான் நாவிதன் வெளி பிரதேச சபையின் தவிசாளராக வந்த போது இப்பிரதேசம் குடியேற்றப்பட்ட பிரதேசமாகவே இருந்தது. இங்கு ஒரு அபிவிருத்தி விடயங்களும் இடம்பெறவில்லை. நான் தைரியமாகச் சொல்வேன் இங்கு ஏராளமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளேன். இந்த அண்ணமலை பொது விளையாட்டு மைதான அரங்கம் கூட எமது அபிவிருத்திப் பணிகளில் ஒன்றுதான்.

அவ்வாறு எங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட அரங்கில் வைத்து இந்தக் கலையரசனை மோசமாகப் பேசியபோது எமது பிரதேச இளைஞர்கள் கைதட்டி ஆரவாரித்ததுதான் மிகவும் வேதனையாக இருந்தது. இந்த மைதானத்திலே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியூடாக சுமார் 50 இலட்சம் மெறுமதியான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல நான் பிரதேச சபைத் தலைவராக வந்த பின்னர் 1952ன் பின் புனரமைப்பே காணப்படாமல் இருந்த வாய்க்கால் புனரமைக்கப்பட்டு இன்னும் அதிகதூரம் வெட்டப்பட்டு இன்று குடியிருப்புமனை வரைக்கும் விவசாயம் செய்யப்படுகின்றதே அந்த விடயங்களையும் எமது பிரதேச இளைஞர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை.

முஸ்லீம் அமைச்சர்கள் தமிழ்ப் பிரதேசங்களைப் புறக்கணித்து குடிநீர்த் திட்டங்களை அமுல்ப்படுத்தினார்கள். எமது மக்களுக்கு அந்த குடிநீர்த் திட்டம் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல அமைச்சர்களைச் சந்தித்து எமது பிரதேசத்திற்கும் அந்தக் குடிநீர்த் திட்டத்தை அமுல்ப்படுத்தினேனே அதற்காகத்தானா அந்த இளைஞர்கள் கைதட்டினார்கள்?

எங்கள் கட்சியூடாக நன்மை பெற்றவர்களே இன்று எமது கட்சிக்குத் துரோகம் செய்கின்றார்கள். நாங்கள் உதவி செய்தவர்களே எங்களைத் தோற்கடிக்க முனைகின்றார்கள். இது ஒருபோது நடக்காது. இங்கு சிலருக்குத் தேசியப்பட்டியல் பைத்தியம் பிடித்திருக்கின்றது. மட்டக்களப்பில் தனக்கு இழந்துள்ள ஆதரவை சரி செய்வதற்காக இங்கு சிலரை வைத்து தேசியப்பட்டியல் ஆசைகாட்டி வாக்குகளைச் சிதறடிப்பதே அவர்களின் நோக்கம். நாட்டின் நிலமை தெரியாமல் அந்தச் சிலரும் புத்தியற்று அவர்களுக்கு வேலை செய்கின்றார்கள். ஆனால் அவர்கள் நினைப்பது ஒருபோதும் நடக்காது. இம்முறை இலங்கை தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்திலே ஒரு ஆசனம் பெறுவது உறுதி. நாங்களே எமது பிரதேசத்தை வளப்படுத்துவோம் என்று தெரிவித்தார்.

## எதிர் பிரச்சாரங்களில் பெருமை கொள்ளும் சுமந்திரன்

உடைத்தனர் என அடுத்தவர் மீது விரல் நீட்டும் சுமந்திரன் அதே பதவி ஆசையால் தனது கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் கிடைக்கவேண்டும் என்பதற்காக கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடன் எந்தவித இணக்கப்பாட்டையும் ஏற்படுத்தாத அவரது தான்தோன்றித்தனமான முடிவே கூட்டமைப்பின் இன்றைய நிலைக்கு காரணம் எனபதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

தனது அரசியல் எதிரிகள் தனது பெயரை உச்சரிக்காது தமது அரசியலை நடத்த முடியாது என பெருமையாக வேறு பேசிக் கொள்கிறார். அவ்வாறு அவர்கள் கூறுவதை தனது வெற்றியாகவும் தனக்கான பிரச்சாரமாகவுமே எடுத்துக் கொள்வதாகவே அந்த ஊடக சந்திப்பில் கூறியுள்ளார். உண்மையில் சுமந்திரன் இதனை புத்திக் கூர்மையுடன் கூறுகின்றாரா என்று எனக்கு ஐயமாக உள்ளது. அல்லது இக் குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக் கொண்டுதான் கூறுகின்றாரா என்றும் எனக்கு ஐயமுள்ளது.

எமது நாட்டு அரசியலைப் பொறுத்தவரை இலங்கை மத்திய வங்கிக் கொள்ளை பற்றிக் கூறுவதாயின் எவ்வாறு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பெயரைதவிர்க்கமுடியாதோ, ஹெல்பிங் ஏஜ் அம்பாந்தோட்டை பற்றிக் கூறினால் எவ்வாறு மகிந்த ராஜபக்சவைத் தவிர்க்க முடியாதோ, அக்காலத்துப் பிரபலமான அமைச்சர் ஒருவரது பத்து வீத கமிசன் என்றால் அந்த நிதியமைச்சரின் பெயர் எவ்வாறு தவிர்க்க முடியாதோ, அவன்ஹார்ட் மற்றும் ஊழல் பற்றிப் பேசினால் கோத்தபாயவை எவ்வாறு பேசாதிருக்கமுடியாதோ, அண்மைக்காலத்தில் மிகவும் பிரபலமான மருந்து மாபியா பற்றிப் பேசினால் ஹெகலிய ரம்புக்கல்லவை எவ்வாறு தவிர்க்கமுடியாதோ? இவ்வாறு எமது நாட்டில் பல பெயர்கள் பல பிரச்சினைகளில் தவிர்க்கமுடியாது உச்சரிக்கப்பட்டே ஆகவேண்டும்

அந்த வகையிலேயே ஐக்கியமாக முரண்பாடுகளுக்கு மத்தியிலும் இணக்கப்பாட்டுடன் செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை மரணிக்க வைத்து இறுதி ஆணியை சவப்பெட்டிக்கு அடித்த பெருமைக்குரியவர் சுமந்திரன். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவைப்பற்றிக் கூறும்போது சுமந்திரன் பற்றிக் கூறுவது தவிர்க்க முடியாது.

இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்திருந்தவர்கள் சிதைவின் பின்னர் சுமந்திரன் பெயரை உச்சரித்து இதனைக் கூறுகின்றார்களேயொழிய தமது அரசியல் இலாபத்துக்காகக் அவரது பெயரைக் கூறவில்லை. சுமந்திரன் புகழ் பாடுவதற்காக சுமந்திரன் பெயரைக் கூறவில்லை. சுமந்திரன் தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செய்த சதியினை அம்பலப்படுத்துவதற்காகவே அவரது பெயரை உச்சரிக்கிறார்கள். இவ்வாறு உச்சரிப்பது அவருக்குப் பெருமையா, அவருக்கு பிரபலமா, அதனை அவர் பெருமையாக நினைக்கின்றாரா?

இது உங்களுக்கு ஒரு பெருமைமிகு பிரச்சாரமா இதை நீங்கள் பெருமை மிகு பிரச்சாரமாகக் கருதுவீர்களென்றால் தங்கள் மீதான குற்றச்சாட்டை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? சுமந்திரன் தொடர்பாக எதிரணியினர் மட்டும் இக்குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. அவரின் தமிழரசுக்கட்சியினரும் அவரோடு இன்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் அவரது சக வேட்பாளர்களும் கூட இந்தக் குற்றச்சாட்டுக்களை பகிரங்க மேடைகளில் கூறிவருகின்றார்கள். அவ்வாறெனில் உங்களுக்கெதிராக உங்களுடைய கட்சியினரே குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது உங்களுக்குப் பெருமையா என்பதனைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இதற்கான தகுந்த, பதிலினை 14ஆம் திகதி தமிழ்த் தேசியம் மீது பற்றுள்ள எம் தமிழ் மக்கள் தகுந்த பதிலடி மூலம் தமிழரசுக்கட்சியை மண்கவ்வ வைத்து தகுந்த பாடத்தை புகட்டுவார்கள்.

# பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய வாய்ப்புள்ளது

(க.ருத்திரன்)

பேரம் பேசும் சக்தியாக நாங்கள் இருக்கின்றபோது எங்களது அரசியல் உரிமை,ஒரு இலங்கைக்குள்ளே அரசியல் தீர்வு என்கின்ற விடயம்,ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்,அவர்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் சட்டவிரோத நில ஆக்கிரமிப்பு போன்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய வாய்ப்புள்ளதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமை வேட்ப்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

வாகரை புதுர் பிரதேசத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் வாகரை கிளையனால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பரப்புரை கூட்டத்தின்போது அங்கு வருகை தந்த மக்கள் மத்தியில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்ற கட்சி இலங்கை தமிழ் அரசு கட்சியாகும். ஊழற்றதும்,களவு மற்றும் கட்சி தாவுதல் அற்றதுமான அவர்கள் கூறும் தகுதிகள் உள்ள கட்சி எமது தமிழ் அரசு கட்சியாகும்.நாங்கள் கொலை செய்தவர்கள்,கொள்ளையடித்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. கப்பம் வாங்கி சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவர்களுக்கும் எமது கட்சி நியமனம் வழங்கவில்லை.எனவே இம்முறை எமது மக்கள் வடக்கு கிழக்கிலே அதிகளவு வாக்களிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.வடக்கு கிழக்கிலே அதிகளவு வாக்கினைப் போட்டால் அதிகளவு ஆசனம் கிடைக்கப்பெறும். அதிகளவு ஆசனம் கிடைக்கப் பெறும் பட்சத்தில் ஜனாதிபதி சார்ந்த கட்சிக்கு 105 அல்லது 108 ஆசனங்கள் கிடைக்கப் பெறும் போது பாராளுமன்றத்திற்கு அதிகளவு ஆசனங்கள் தேவைப்படும் நிலை ஏற்படும்.இதன்போது அவர் எங்களது உதவியை தேடி வரக் கூடிய வாய்ப்பு வரலாம்.எங்களது உதவியை தேடி



வரும்போது அவருக்கு உதவி வழங்குவதா,இல்லையா,என்பது பற்றி பிறகு பார்ப்போம் என்றார்.

எங்களது மக்கள் அதிகளவு வாக்கு போட்டால் மாத்திரமே இந்த நாட்டிலே நாம் பேரம் பேசும் சக்தியாக இருக்கலாம்.பேரம் பேசும் சக்தியாக நாங்கள் இருக்கின்றபோது எங்களது அரசியல் உரிமை,ஒரு இலங்கைக்குள்ளே அரசியல் தீர்வு என்கின்ற விடயம்,ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களுக்கான பொறுப்புக்கூறல் வேண்டும்.ஆயிரக் கணக்கான மக்கள் காணமல் ஆக்கப்பட்டுள்ளனர் அவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும்.அதற்கான விசாரணை நடக்க வேண்டும்.நில ஆக்கிரமிப்பு விடயங்கள் நிறுத்தப்பட வேண்டும்.வன இலகா திணைக்களம்,கரையோரம் பேணல் திணைக்களம் மகாவலி அதிகாரசபை மற்றும் தொல் பொருள் திணைக்களத்தின் தலையீடு போன்றவை எமது மக்களுடைய காணிகளை அபகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுதல் நிறுத்தப்படல் வேண்டும். என்கின்ற பல்வேறுபட்ட விடங்களை பேசி தீர்க்கமுடியும் என்றார்.

ஆனால் வடக்கு கிழக்கிலே விசேட அபிவிருத்தி நிதியங்களை உருவாக்கி எமது மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். தென்னிலங்கை அரசாங்கம் போடுகின்ற பிச்சையைக் கொண்டு எமது மக்களின் அபிவிருத்யை மேற்கொள்ள முடியாது.வடக்கு கிழக்குக்கென்று விசேட நிதியம் ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கமுடியும்.

இந்த விடயங்களை மேற்கொள்ள வேண்டும் என்றால் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.வாகரை பிரதேசத்தினை அபிவிருத்தி செய்து கட்டியெழுப்ப வேண்டும்.இந்த பிரதேச மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். அந்தப் பொறுப்பை நீங்கள் எங்களுக்கு முழுமையாக தர வேண்டும்.வாகரை பிரதேசத்தை காப்பற்ற வேண்டும் என்றால் தமிழ் அரசு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். அதற்காக வாகரையை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று பொய் கூறவில்லை.வாகரை மண்ணை விற்று வாங்கிய சாரயம்தான் தேர்தல் காலங்களில் வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# தாண்டியடியில் தமிழரசு வேட்பாளர் ஜெயசிறிலை ஆதரித்து இடம் பெற்ற கூட்டம்: பெருமளவான மக்கள் பங்கேற்பு








( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் இல 05 இல் போட்டியிடும் காரைதீவு பிரதேச முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலை ஆதரித்து திருக்கோவில் தாண்டியடியில் பொதுமக்களாலும்

இளைஞர்களாலும் அமோக வரவேற்புடன் ஆதரவு கூட்டம் (09) சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்ட வேட்பாளர் ஜெயசிறிலுக்கு நூற்றுக்கணக்கான பொதுமக்களும் இளைஞர்களும் இணைந்து அமோக வரவேற்பளித்ததுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.

அங்கு சமூகமளித்திருந்த ஹரேராமா ஹரே கிருஷ்ணா அமைப்பின் மதபிரமுகர் பிரபு உரையாற்றுகையில்.. நாங்கள் அரசியலில் ஈடுப டுபவர் அல்ல . ஆனால் அரசியலையும் ஆன்மீகத்தையும் சரியாக மக்களுக்கு சேவையும் செய்கின்ற ஜெயசிறில் அவர்களை நாம் பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

இவர் தேர்தலுக்காக வந்தவர் அல்ல

ஆனால் இவ்வளவு காலமாகவும் இந்த பிரதேசத்திலேயே இருந்தவர். மக்களுக்கு நிறைய செய்திருக்கின்றார்.

பாராளுமன்றம் அனுப்புங்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்புவேன் என்ற உங்களுடைய சபதம் சரியாக இருந்தாலும் அனைத்து பிரதேசத்தில் இருக்கின்ற மக்களை செய்து வாக்களிக்க சொல்லி அவரை சிம்மாசனம் ஏற்றினால் அவருக்கு பதிலாக நாங்கள் சிம்மாசனம் ஏறியதற்கு சமன்.

அவர் தலைவராக இருந்த மீனாட்சியம்மன் ஆலயம் இன்று சிறப்பாக விளங்குகின்றது. நாங்கள் போய் நேரடியாக பார்வையிட்டோம்.

கொரோனா காலகட்டத்திலே அவர் பல உதவிகளை செய்துள்ளார்.

# சக வாழ்வினை முன்னிலைப்படுத்தும் தமிழ் கட்சி ஈபிடிபி

கொழும்பு மாநகரில் தமிழ் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி இலங்கை வாழ் மக்களிடையே சமத்துவம் சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்ற தோரணையில் இம்முறை கொழும்பு மாவட்டத்தில் தேர்தல் வேட்பாளர்களில் இந்து ,இஸ்லாம், பௌத்த மதங்களைச் சேர்ந்த வேட்பாளர்களை தேர்தல் களத்தில் நிறுத்தியுள்ளது.

முதன் முதலாக தமிழ் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மூவின மக்களையும் மூவின மதங்களையும் அடங்கிய வேட்பாளர் குழுவினை நிறுத்தி கொழும்புக்கு மட்டும் இல்லாது முழு இலங்கையிலும் சமத்துவம் சகோதரத்து உணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் முகமாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் தெரிவு இடம்பெற்றுள்ளது .

இதனை அனைத்து இன மக்களும் அதாவது மூவின மக்களும் மனதார பாராட்டி ஒற்றுமை உணர்வு இந்த நாட்டிற்கு சமாதான சகோதரத்துவம் முக்கியம் என்பதை உணர்ந்து கொழும்புவாழ் மக்கள் சகோதரத்துவத்துடன் கரங்களை கோர்த்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு வாக்களிப்பதற்கும் வீணை சின்னத்திற்கு வாக்களிப்பதற்கும் தயாராகி வருவதாக தேசிய பட்டியல் உறுப்பினர் பாபு சர்மா பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

# அம்பாறையில் தமிழரசுக்கட்சி 60 ஆயிரம் வாக்குகளை பெற்று சரித்திரம் படைக்கும்!!

## காரைதீவில் வேட்பாளர் கோடீஸ்வரன் சாட்டை!

( வி.ரி. சகாதேவராஜா)

கடந்த தேர்தலில் கருணா செய்தது தவறு. அவர் தெரியாமல் அதை செய்தார்.ஆனால் இம் முறை தமிழருக்கான ஒரேஒரு பிரதிநிதித்துவம் ஊசலாடுகிறது என்று தெரிந்தும் இங்கு வரிந்து கட்டிக் கொண்டு சங்கு போட்டியிடுவது மகாதவறு. எனவே அம்பாறைத் தமிழர்களுக்கு கருணா செய்த துரோகத்தை விட சங்கு செய்கின்ற துரோகம் மகா துரோகம் ஆகும்.

இவ்வாறு காரைதீவில் தனது பிரச்சார அலுவலகத்தை (9) சனிக்கிழமை மாலை திறந்து வைத்து பேசிய அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளருமான ஏ.கே. கோடீஸ்வரன் தெரிவித்தார் .

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி 60 ஆயிரம் வாக்குகளை பெற்று சரித்திரம் படைக்கும் என்றும் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.. அன்று கருணா மட்டும் வந்து தமிழ் பிரதிநிதித்துவத்தை சிதறடித்தார். இன்று படகு வீடு சைக்கிள் திசைகாட்டி மணிக்கூடு என வந்து தமிழ் பிரதிநிதித்துவத்தை அழிக்க புறப்பட்டு இருக்கின்றனர் .



இவர்களெல்லாம் கடந்த காலத்தில் இங்குள்ள தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள்? என்பதை மக்கள் அறிவார்கள்.

தாங்கள் வெல்ல முடியாது என்று அறிந்தும் தெரிந்தும் களம் இறங்கி இருக்கின்றார்கள்.

புளட் சித்தார்த்தன் இயக்கத்தில் இயங்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சங்கு படு தோல்வி அடைய இருக்கின்றது. தெரிந்தும் சுரேஷ் சித்தரின் தேசிய பட்டியலுக்காக இங்கு அவர்கள் களமிறக்கப்பட்டு இருக்கின்றார்கள் .

75 வருட கால பழந்தமிழ் கட்சியான எமது கட்சியை உடைப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எதுவுமே எடுபடாது .

நாங்கள் அம்பாரை மாவட்டத்தில் 2015 தொடக்கம் 2020 வரைக்கும் 1800 மில்லியன் பெறுமதி யான அபிவிருத்தியை செய்து இருக்கின்றோம்.

இம்முறை வரலாற்றில் என்றும் இல்லாதவாறு இலங்கை தமிழரசுக் கட்சி 60 ஆயிரம் வாக்குகளை பெற்று சரித்திரம் படைக்க இருக்கிறது.

எனவே தமிழரசுக் கட்சி வெல்லப்போவது தெரிந்த விஷயம்.அதுக்கு மட்டும் ஆதரவு அளித்து உங்களது வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள் என்றார் .

வேட்பாளர் கே.யசோதரனும் கலந்து சிறப்பித்தார்.

# அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆக்கப்பட்டால் முதல் துரோகி திசைகாட்டி இரண்டாவது துரோகி வீடு!

## பாண்டிருப்பில் சங்கு வேட்பாளர் கிருஷ்ணா காட்டம்

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மீண்டும் தமிழின பிரதிநிதித்துவம் இல்லாமல் போனால் அதற்கு முதல் காரணம் திசைகாட்டி. இரண்டாவது வீடு. இந்த பழிபாவத்தை இந்த இரண்டு கட்சிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பாண்டிருப்பில் தனது கட்சிக்கான பரப்புரைக் காரியாலயத்தை திறந்து வைத்து பேசிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ராஜ்குமார் பிரகாஷ் தெரிவித்தார் . ரெலோ முக்கியஸ்தர் ஹென்றி மகேந்திரன் வேட்பாளர்களான பி. கார்த்திக் த. கலைக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர் . இந்த திறப்பு விழாவில் பிரகாஷ் மேலும் பேசுகையில் ..



திசைகாட்டியில் 5 சிங்களர்களும் நான்கு முஸ்லீம்களும் ஒரே ஒரு தமிழரும் இறக்கப்பட்டு இருக்கின்றார்கள் .

இந்த தமிழரால் 38 ஆயிரம் வாக்குகளை பெற முடியுமா? கடைசிவரையும் முடியாது . ஆக 2000 வாக்குகளை பெற்று அதனை ஏனைய சமூகங்களுக்கு தாரை வார்க்க விரும்புகின்றார்.

மற்றவர் வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்து இம் முறை தேர்தலில் பிள்ளையான் .

அம்பாறை மாவட்டத்தில் அவர் ஒரு ஒழுங்கையாவது போட்டு இருக்கின்றாரா?

அம்பாறை மாவட்டத்தில் ஒற்றுமையாக தேர்தலில் நிற்பது சங்கு என்பதை மறந்துவிட முடியாது.

சிலவேளை 4 ஜேவிபி எம்பிக்கள் வந்தால் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழரும் எம்பியாக வர முடியாது.

# ஒரு சமூகத்தினை வீழ்த்தி இன்னுமோரு சமூகம் வேற்றி பேற வேண்டும் என்னும் கலாசாரம் மாற்றியமைக்க வேண்டும்

(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இம்மாவட்டத்தில் வாழும் அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் ஒவ்வொரு வகையான பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலமாகவும் புரிந்துணர்வு ரீதியாகவுமே தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு சமூகத்தினை வீழ்த்தி இன்னுமொரு சமூகம் வெற்றி கொள்தல் எனும் நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட வேண்பாளருமான எம்.எஸ்.உதுமாலெவ்வை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட ஊடகவியலாளர் மாநாடு இன்று(10) இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தமொன்று நடைபெற்ற நம் நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் பல்வேறான பிரச்சினைகள் இருக்கும். அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக சமூக ரீதியாகவும் இன ரீதியாகவும் நாம் பிரிந்து நின்று போட்டி மனப்பான்மையுடன் நடந்து கொள்ளக் கூடாது. பேசித் தீர்த்து வைக்க முடியாமல் எந்தவொரு பிரச்சினையும் நம்நாட்டில் இல்லை.



போட்டி மனப்பான்மையுடன் நாம் ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுகின்ற போது பல பிரச்சினைகள் எழுவதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு. ஒவ்வொரு சமூகத்தவர்களைப் பொறுத்த வரையில், யார் தோல்வி அடைந்தாலும், யார் வெற்றி பெற்றாலும் சில வடுக்கள் ஆறாத காயமாக பரம்பரை பரம்பரையாக தொடரக் கூடிய நிலை தோற்றம் பெறும் இதனால் எம்மத்தியில் பகைமையும் பிரச்சினைகளும் தீராமலேயே போய்விடும்.

எந்தவொரு விடயத்தினைப் பொறுத்தவரையிலும், எந்தவொரு சமூகத்தின் உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு சமூகத்தின் உரிமையினையும் சுதந்திரத்தினையும் புறந்தள்ளி விட்டு இன்னுமொரு சாரார் வெற்றி கொள்வதால் அதில் பயனேதுமில்லாமல் போய்விடும். அனைத்து பிரச்சினைகளும் பேச்சுவார்த்தை தீர்வின் அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் மதிப்பளித்து பெறுகின்றபோது எம்மத்தியில் ஒற்றுமை நிலைநாட்டப்படும்.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு அதிகப்படியான செல்வாக்கு இருக்கின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் இம்மாவட்டத்தில் மரச்சின்னத்தில் தனித்து போட்டியிடுகின்றது. இக்கால கட்டத்தில் இம்மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற தூய எண்ணத்தின் அடிப்படையிலேய நாம் எமது கட்சியில் தனித்து போட்டியிடுகின்றோம்.

அம்பாறை மாவட்டத்தில் எந்தக் கட்சியாக இருந்தாலும் முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினை இழந்து விடக் கூடாது. முஸ்லிம் மக்களுடைய பாராளுமன்ற பிரதிநிதிதுவம் குறையாமல் இருக்கவும், எமது முஸ்லிம் மக்களுடைய வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை இனத்தை சேர்தவர்கள் பாராளுமன்ற செல்லும் ஆபத்தினைக் கருத்திற் கொண்டுதான் நாம் இம்முறை எமது கட்சியில் தனித்து போட்டியிடுகின்றோம். எமது கட்சிக்கு அதிகப்படியான பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கின்றபோது எமது மக்களுக்கு அதிகமான நன்மைகள் கிட்டும். எமது கட்சி தனித்து போட்டியிடும் அம்பாறை மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அதிகம் அதிகமான வாக்குகள் கிடைக்கின்றபோது தேசியப் பட்டியல் பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் நன்கு சிந்தித்து வாக்களிப்பார்களாக இருந்தால் மூன்று அல்லது இரண்டு பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியும. இம்மாவட்டத்தில் கடந்த காலங்களில் முரண்பாடுகளில் இருந்த எமது கட்சிக்காரர்களை தனித்தனியாக சந்தித்து நாங்கள் ஒற்றுமைப்படுத்தியிருக்கின்றோம். அதனால் கடந்த காலங்களை விட தற்போது எமது கட்சிக்கு அதிகமான ஆதரவு உண்டு.

நான் மாகாண அமைச்சராக கடந்த காலங்களில் செயற்பட்ட போது மூவின சமூகத்திற்கும் பல்வேறான அபிவிருத்திகளை மேற்கொண்டிருக்கின்றேன். அபிவிருத்தி மூலமாக சமூக ஒற்றுமையினையும் புரிந்துண்வினையும் கட்டியெழுப்ப முடியும் எனும் விடயத்தினை நிலை நாட்ட முடியும் என்பதனூடாக நாம் பல பணிகளை இம்மாவட்ட மக்களுக்காக செய்திருக்கின்றோம்.

இம்மாவட்ட மக்களுக்காக நாம் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்திருக்கின்றோம். பல்வேறு பிரச்சினைகளுக்கு புறமுதுகு காட்டாது முன்னின்று நாம் குரல் கொடுத்திருக்கின்றோம். எமது பிராந்திய மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் பிளவுகளையும் பிரச்சினைகளையும் கைவிட்டு அனைத்து இன மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்னும் நிலைப்பாட்டிலேயே உள்ளோம்.

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறும் எம்மவர்கள் நமது மக்களின் உரிமைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து சுயநலம் மறந்து செயற்பட வேண்டும். நமது கட்சியினைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நமது மக்களின் நலனை மறந்து அரசாங்கத்திற்கு ஆதரவளித்தமையால் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கும் விடயத்திலும் அவர்கள் எதிர்ப்பினை சம்பாதித்தார்கள் என்றார்.



# அமரர் நடராசா ரவிராஜின் 18 வது நினைவு தினம்






(த.சுபேசன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அமரர் நடராசா ரவிராஜின் 18 ஆவது நினைவு தினம் யாழ். சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது நினைவுச் சிலையருகில் 10/11 ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது அமரர் ரவிராஜின் பாரியார் சசிகலா ரவிராஜ், ஈகைச் சுடர் ஏற்றி

நினைவஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அமரர் நடராஜா ரவிராஜ், 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டிய விலுள்ள அவரது இல்லத்தில் இருந்து அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமரர் ரவிராஜ், 1998 - 2001 ஆண்டுகளில் யாழ். மாநகர சபை உறுப்பினராகவும், பிரதி முதல்வராகவும், முதல்வராகவும் பதவி வகித்ததுடன்- அதனைத் தொடர்ந்து 2001 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரு தடவைகளும் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இ.தோ.கா வேட்பாளர்களை ஆதரித்து ரணில் விக்கிரமசிங்க பரப்புரை முன்னெடுப்பு



(க.கிஷாந்தன்)

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் இ.தொ.கா வேட்பாளர்களை ஆதரித்து, முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க (10.11.2024) கொட்டகலை சி.எல்.எப் மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு வேட்பாளர்களுக்காக பரப்புரை முன்னெடுத்தார்.

இந்த பிரச்சார கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், பிரதி தலைவர்களான கணபதி கனகராஜ், அனுஷியா சிவராஜா நோர்வூட், கொட்டகலை, மஸ்கெலியா ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்களான ரவி குழந்தைவேல். ராஜமணி பிரசாத், திருமதி.செண்பகவள்ளி, ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் கே.கே.பியதாச உள்ளிட்ட மாவட்ட வேட்பாளர்களும் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தின்கீழ் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் சக்திவேல் ஆகியோர் இ.தொ.கா சார்பில் களமிறங்கியுள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.

# ஜனநாயக தேசிய கூட்டணியின் மாபெரும் தேர்தல் கூட்டம்



(த.சுபேசன்)

தபாற்பெட்டிச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் மாபெரும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் 10/11 ஞாயிற்றுகிழமை காலை நாவாந்துறை சென்.மேரிஸ் மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி நிகழ்வில் ஜனநாயக தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட சக வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரோட்டரி கழகம் மூலமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இணைப்பு பாலம்

(ஹஸ்பர் ஏ.எச் )

இந்தியாவிலிருந்து 30 க்கும் அதிகமான ரோட்டரி அங்கத்தவர்கள் 09-11-2024 அன்று திருகோணமலை ரோட்டரி கழக இல்லத்துக்கு வருகை தந்து தங்கள் அன்பினை வெளிப்படுத்தினார்கள். முன்னாள் ஆளுநர் திரு சம்பத்குமார் தலைமயில் 3231 ஆளுநர் ராஜன் பாபு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள ரோட்டரி கழக தலைவர்களும், அங்கத்தவர்களும் இணைந்திருந்தார்கள்

இவ் வைபவத்தில் திருகோணமலை ரொட்டறி கழக தலைவர் ஜெகதீசன், கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார். அவர்களுது வருகையை நினைவு கூறும் படி குச்சவெலி விவேகானந்த கல்லூரி மாணவர்களுக்கு 60 பாதணி வழங்கப் படடது.

முன்னாள் ஆளுநர் திரு சம்பத்குமார் தமது உரையில் திருகோணமலை ரொட்டறி கழக சேவைகளை பாராட்டி தொடர்ந்து இணைந்து செயல் பட விரும்புவதாக கூறினார்.. 3231 ஆளுநர் ராஜன் பாபு மற்றும் தமிழ்நாட்டில் உள்ள ரோட்டரி கழக தலைவர்களும் உரையாற்றினார்கள் இறுதியாக செயலாளர் ரவிச்சந்திரன் நன்றியுரை நிகழ்த்தினார்.




# ஒலுவில் மண்ணில் மாபெரும் பெண்கள் எழுச்சி மாநாடு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மரச்சின்னத்தில் 03ஆம் இலக்கத்தில் போட்டியிடும் திகாமடுல்ல மாவட்டத்தில் கல்முனைப் தொகுதியின் வெற்றி வேட்பாளர் கலாநிதி சிராஸ் மீராசாஹிபை ஆதரித்து (9) சனிக்கிழமை ஒலுவில் மண்ணில் ஏற்பாடு செய்த மாபெரும் பெண்கள் எழுச்சி மாநாடு ஏ.பி.எம். ராபி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்து கொண்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார்.

இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அமானுல்லா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், போராளிகள், பெண்கள், இளைஞர்கள் என பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# பொதுத் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

(வி.ரி. சகாதேவராஜா)


எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை தேசிய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

பொலன்னறுவை, மொனராகலை மற்றும் களுத்துறை ஆகிய தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் ஒரே நெடுவரிசையிலும், ஏனைய தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் இரண்டு பத்திகளிலும் அச்சிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுடன் ஒவ்வொரு வீட்டுக்கும் விநியோகிக்கப்படும் வேட்பாளர்களின் பட்டியலில் ஒவ்வொரு தொகுதிக்கான மாதிரி வாக்குச் சீட்டு அச்சிடப்படும்.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கும் விருப்பங்களை குறிப்பதற்கும் புள்ளடியை (X) மட்டுமே பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்களிக்கும் போது வாக்காளர்கள்ம அதற்கேற்ப வாக்களிப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்;



# தேசிய மக்கள் சக்தியினர் கூறியது போல் தொழிலாளர்களுக்கு 2000 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளத்தை 35 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியினர் வலியுறுத்தினர். எனவே, தற்போது 2 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப் மைதானத்தில் 10.11.2024 அன்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார் . இதன்போது உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியவை வருமாறு,

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மலையக மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ்தான் மலையக மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் காலங்களில் மலையகத்துக்கு பல சேவைகள் செய்யப்பட்டுள்ளன. ஜீவன் தொண்டமான் அமைச்சராக மலையகத்துக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்கும் வேலை செய்துள்ளார்.



பாராளுமன்றத்தை சுத்தப்படுத்துவதற்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி கோருகின்றார்.

அவர்களின் வேட்பாளர்கள் யாரென்றுகூட தெரியவில்லை. அபூர்வ மனிதன்போல் தான் உள்ளனர். ஜி.பி.ஆர்.எஸ்.மூலம்தான் மாவட்ட எல்லைகளைத் தேடுகின்றனர்.

பாராளுமன்றத்தை கள்வர்களின் குகை என்கிறார்கள், ஆனால் கள்வர்களை பிடிப்பதற்குரிய சட்டங்கள் எனது ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது.

வாழ்க்கைச்சுவை தற்போது அதிகரித்துள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றார்கள், தயவுசெய்து அந்த சம்பள உயர்வை வழங்குமாறு கோருகின்றோம். நாம் அடிப்படை சம்பளத்தை 35 சதவீதத்தால் அதிகரித்து கொடுத்தோம்.

பெருந்தோட்டங்களை கிராமங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். பெருந்தோட்ட நிர்வாகங்களின்கீழ் இருந்து தோட்டங்களை விடுவித்து, தேவையான ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தயாராகி வந்தோம்.

அனுபவம்மிக்கவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். காங்கிரஸ் வேட்பாளர்கள் உட்பட எமது பக்கம் உள்ளவர்கள் அனுபவம்மிக்கவர்கள். எனவே, நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தை வெற்றி பெற வைக்கவும். நுவரெலியாவில் இருந்து யானை சின்னத்திலும், ஏனைய பகுதிகளில் இருந்து சிலிண்டர் சின்னத்திலும் வேட்பாளர்கள் சபைக்கு வரவேண்டும்.- என்றார்.

# சண்டித்தன அரசியல் நாங்கள் செய்யவில்லை

## அறகலய காலத்தில் பாராளுமன்றத்தை எரிப்போம் என்றார்கள் அது தான் சண்டித்தனம்

(க.கிஷாந்தன்)

அறகலய காலத்தில் பாராளுமன்றத்தை எரிப்போம் என்றார்கள், அதுதான் சண்டித்தனமான அரசியல். நாம் எமது மக்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படும் போது களத்துக்கு செல்கின்றோம். இது சண்டித்தன அரசியல் கிடையாது - என்று இதொகாவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சி.எல்.எப் மைதானத்தில் (10.11.2024) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கெஞ்சி கேட்டால் அது பிச்சை, துணிந்து கேட்டால்தான் அது உரிமை. எமக்கு அனுதாபம் வேண்டாம், அங்கீகாரமே வேண்டும். அந்த அங்கீகாரம் கிடைக்க வேண்டுமெனில் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்களித்து உரிமை அரசியலுக்கு ஆணை வழங்குங்கள் எனவும் ஜீவன் குறிப்பிட்டார்.



பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'உரிமை இல்லாததால்தான் ஒரு செங்கலைக்கூட வைக்க முடியவில்லை. எமக்கு சலுகை அரசியல் தேவை இல்லை. எமது மக்களை இழிவுபடுத்துவதற்காக அல்ல தெளிவுபடுத்துவதற்காகவே இந்த விடயத்தை குறிப்பிடுகின்றோம்.

அனுதாபம் இருந்தால் சலுகைகள் மட்டும்தான் கிடைக்கும், அங்கீகாரம் இருந்தால்தான் உரிமைகள் கிடைக்கும். எனவே, அனுதாபமா, அங்கீகாரமா என வரும்போது நாம் அங்கீகாரத்தின் பக்கம் தான் நிற்க வேண்டும். உரிமைகள்தான் எமக்கு முக்கியம்.

காங்கிரசுக்கு வழங்கப்படும் வாக்குகளானவை கல்வி, காணி மற்றும் உரிமைக்காக வழங்கப்படும் வாக்குகளாகும். நமக்கான பிரதிநிதித்துவம் இருந்தால்தான் பாராளுமன்றம் ஊடாக நமக்குரிய உரிமைகளை பற்றி பேச முடியும்.

எமக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கூட்டத்தில் பங்கேற்ற மக்கள் சொந்தங்களுக்கும் நன்றிகள். இம்முறை நடைபெறும் தேர்தலானது மிக முக்கியமானதாகும். எனவே, இதனை பிரச்சாரக் கூட்டமாக பார்க்காமல், ஒரு விழிப்புணர்வுக் கூட்டமாக பாருங்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் 308 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களில் சிலர் அரசியல் கைக்கூலிகளாக வாக்குகளை சிதறடிப்பதற்காக போட்டியிடுகின்றனர். அவ்வாறானவர்கள் நம்பக்கூடாது. ஏனெனில் மாற்றம் பற்றி தற்போது கதைக்கும் அவர்கள் தேர்தலின் பின்னர் காணாமல் போய்விடுவார்கள்.

ஆறு மாத காலப்பகுதிக்குள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளத்தை ஆயிரத்து 350 ரூபாவாக பெற்றுக்கொடுத்தோம். ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனாதிபதியாக ரணில் இல்லாவிட்டால் அந்த 1,350 ரூபாவும் கிடைக்காது என்ற அச்சம் காணப்பட்டது. அதனால்தான் நாம் 1,350 ரூபாவுக்கு உடன்பட்டோம். ஜனாதிபதி தேர்தலில் அவர் வென்றிருந்தால் நிச்சயம் 1,700 ரூபா கிடைக்கப்பெறும் என்ற முடிவுக்கு வந்தோம். எனவே, இராஜதந்திர நகர்வுகளை புரிந்துகொள்ள வேண்டும்.- என்றார்.

